நிகழ்வானது காலை 9.30 மணி அளவில் பெயர் பதிவுடன் ஆரம்பமானது. 10 மணி அளவில் குழித்துறை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை வர்கீஸ் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். அதைத்தொடர்ந்து நிகழ்வின் ஒரு பகுதியான முற்பகலில் திரு. ஐசக் மோகன்லால் அவர்களின் தலைமையில் சிறுபான்மை யினர் உரிமையும் கல்வி நிறுவனங்களும் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தப்பட்டது. அதில் சிறுபான்மையினர் சந்தித்து வரும் சவால்களும், இந்த சவால்களை எவ்வாறு கையாள்வது என்ற கருத்துக்களையும் பகிர்ந்துக் கொண்டனர். அதைத் தொடர்ந்து கேள்வி நேரமும் பின்னர் உணவு இடைவேளையும் வழங்கப்பட்டது.

**இரண்டாம் அமர்வு**

பிற்பகல் 2 மணி அளவில் நிகழ்வின் அடுத்தபகுதியான ஆய்வுப்பணி அருட்பணி D.F போஸ்கோ (TANCEAN, சென்னை) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கல்வி நிறுவனங்கள் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் என்ற சான்றிதழை பெறுவதற்காக கத்தோலிக்க கல்வி கொள்கையைப் பின்பற்றுகிறதா என ஆய்வு செய்வதற்கு படிவங்கள் கொடுக்கப்பட்டு அந்த படிவங்கள் பூர்த்தி செய்து நிகழ்வின் இறுதியில் பொறுப்பாளர்களிடம் வழங்க வேண்டும் என்று கூறப்பட்டது. அதைத்தொடர்ந்து படிவங்கள் பூர்த்தி செய்யும் வழிமுறைகளும் எடுத்துக் கூறப்பட்டது. பின்னர் 4 மணி அளவில் நாட்டுப்பண்ணுடன் பயிலரங்கமானது நிறைவுபெற்றது.

**<u>1. புனித ஜேம்ஸ் உயர்நிலைப்பள்ளி வலியவிளை</u>**

ஜூன் 1 ஆம் நாள் புதிய கல்வியாண்டு ஆரம்பமானது. அனைத்து பள்ளிகளின் தாளாளர் பேரருட்தந்தை ஜோண்சிலாஸ் அவர்கள் வருகை தந்து அனைவருக்காகவும் ஜெபித்து புதிய கல்வியாண்டை தொடங்கி வைத்தார். 2018-2019 ஆம்

கல்வியாண்டிற்கான பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டம் ஜூன் 29 ஆம் நாள் நடைபெற்றது. இதில் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவராக திரு. ஜஸ்டஸ் தேர்வு செய்யப்பட்டார்.

**பள்ளியின் செயல்பாடுகள்**

ஆண்டுதோறும் அரசு நடத்திவரும் திறன் ஆய்வு தேர்வில் 2017-2018 ஆம் கல்வியாண்டில் 9 ம் வகுப்பு மாணவர்களுக்கான ஊரக திறனாய்வு தேர்வில் மாணவி மனுஜா தேர்ச்சி பெற்று நான்கு ஆண்டுகள் தொடர்ந்து அரசிடமிருந்து ரூ. 1000 உதவித்தொகை பெற தகுதி பெற்றுள்ளார்.

**கல்வி இணை செயல்பாடுகள்**

நற்சிந்தனைகளை மாணவர்களிடையே உருவாக்கும் விதமாக சாரணர், சாரணியர் இயக்கம், தேசிய பசுமை படை, செஞ்சிலுவை சங்கம் மற்றும் அரசியல் அமைப்புச் சட்டம் என பல மாணவர் அமைப்புகள் செயல்படுகின்றன.

**ஆங்கில வழி கல்வி**

ஆங்கில மொழி வழிக் கல்வி புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆங்கில வழி கல்வியை பயிற்றுவிப்பதற்காக புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. திருமதி ஜோஸ்பின்
2. செல்வி சபஜா
3. திருமதி மேரி ஜாஸ்மின்
4. திருமதி அனிஷா

**மாணவர் சீருடை மாற்றம்**

2018-2019 ஆம் கல்வியாண்டில் மாணவர்களுக்கு புதிய பள்ளி சீருடை மாற்றப்பட்டது.

## 2. மார் மத்தேயு காவுகாட்டு நினைவு உயர்நிலைப்பள்ளி வாறுதட்டு

ஜூன் 1 ஆம் நாள் ஆசிரியர் மன்றக் கூட்டம் பள்ளி தாளாளர் பேரருட்தந்தை ஜோண்சிலால் மற்றும் பள்ளி நிர்வாகி பேரருட்தந்தை ஜோஸ் ஒட்டலாங்கல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஜூன் 21 ம் நாள் உலக யோக தினம் கொண்டாடப்பட்டது. மேலும் ஜூலை 14 ம் நாள் பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழா கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டது.

## 3. திருக்குடும்ப மேல்நிலைப்பள்ளி முக்கூட்டுகல்

ஜூன் 14 ஆம் நாள் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இராஜ்ஜிய புரஷ்கார் விருது வழங்கும் நிகழ்ச்சியில் மாணவன் நிதீஸ் ராஜ் விருது பெற்றான். இவ்வாண்டு 16 சாரணர்கள் ஜனாதிபதி விருதுக்கும் 8 சாரணர் மற்றும் சாரணியர்கள் ஆளுநர் விருதுக்கும் விண்ணப்பித்துள்ளனர்.

**துவக்கம்**

ஜூலை 14 ஆம் நாள் பிற்பகல் 2.10 மணி அளவில்

அனைத்து பள்ளிகளின் தாளாளர் பேரருட்தந்தை ஜோஸ்சிலால் அவர்கள் தலைமையில் வாகிய பள்ளியின் ஜூபிலி பொன்விழா தொடக்கம், காமராஜர் பிறந்த நாள் விழா மற்றும் இலக்கிய மன்ற தொடக்கவிழா ஆகிய முப்பெரும் விழாக்கள் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு விழாவினை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்கள்.

4. புனித மத்தேயு நடுநிலைப்பள்ளி அன்னிக்கரை

ஜூன் 1 ம் நாள் புனித மத்தேயு நடுநிலைப்பள்ளி திறக்கப்பட்டது. அன்றைய தினம் மாணவர்களை வரவேற்கும் விதமாக பலூன்களும் இனிப்பும் வழங்கப்பட்டது.

பயிற்சிகள்

திங்கள் முதல் வியாழக் கிழமை வரை மாலை 3.30 முதல் 4.10 வரை அனைத்து மாணவர்களுக்கும் பள்ளி மைதானத்தில் வைத்து தமிழிலும், ஆங்கிலத்திலும் வாய்பாடு பயிற்சி மற்றும் பொது அறிவு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் மரம் நடும் விழா, தோமையார் தினவிழா, மற்றும் காமராஜர் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டு போட்டிகள் நடத்தி பரிசுகளும் வழங்கப்பட்டன.

5. திருக்குடும்பம் தொடக்கப்பள்ளி முக்கூட்டுகல்

ஜூன் 1 ஆம் நாள் நடைபெற்ற மாணவர் சேர்க்கை பெருவிழாவில் பாலர் பள்ளியில் 46 மாணவர்களும், ஆரம்ப பள்ளியில் 51 மாணவர்களும் புதிதாக சேர்க்கப்பட்டனர்.

தினவிழா

ஜூன் 5 ஆம் நாள் உலக சுற்றுச்சூழல் தினம் பேரருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஜூன் 21 ஆம் நாள் உலக யோகா தினம் கொண்டாடப்பட்டது. அகில உலக போதைப்பொருள் ஒழிப்பு தினமாகிய ஜூன் 26 ஆம் நாள் மாணவர்களால் போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

புதிய ஆசிரியர்

மாணவர்களுக்கு கணினி பயிற்றுவிப்பதற்காக கணினி ஆசிரியராக திரு. விஜூ அவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

**Psychology Class**

தக்கலை மறைமாவட்ட தனியார் பள்ளிகளை சார்ந்த ஆசிரியர்களுக்கான Psychology Class வகுப்புகள் 6-07-2018 அன்று தக்கலை சங்கமத்தில் வைத்து ஆரம்பமானது. Psychology வகுப்பிற்கு 5 பள்ளிகளை சார்ந்த 20 ஆசிரியர்கள் வருகை தந்திருந்தனர். வகுப்பினை ஆரம்பித்து வைப்பதற்காக மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் வருகை

தந்தார். மேலும் பேரருட்தந்தை தோமஸ் பொளத்துபறம்பில் மற்றும் அருட்தந்தை றோபின்ஸ் குழிகோடில் அவர்களும் கலந்துக் கொண்டனர்.

கல்வி முறை

கூட்டத்தில் அனைத்து பள்ளிகளின் தாளாளர் பேரருட்தந்தை ஜோண்சிலாஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். மேதகு ஆயர் அவர்கள் இன்றைய காலக்கட்டத்தில் பயிற்றுவிப்பது என்பது பழைய காலகட்டத்தை போன்றது அல்ல. அப்போதைய ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவு சார்ந்த கல்வியை மட்டுமே அளித்தனர். தற்போது அது சாத்தியம் அல்ல இன்றைய நவீன காலகட்டத்தை மனதில் கொண்டு ஆசிரியர்கள் மாணவர்களின் அறிவு சார்ந்த, மனம் சார்ந்த, உடல் சார்ந்த மற்றும் ஆன்மீகம் சார்ந்த வளர்ச்சிக்கு உதவியாக இருக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர்கள் நல்ல ஆசிரியராக இருக்க மாணவர்களின் உளவி.ல் சார்ந்த வளர்ச்சியை பற்றி தெரிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று ஆசிரியர்களிடையே உரையாற்றினார்.

அறிமுகம்

ஆயர் அவர்கள் Psychology வகுப்பினை பயிற்றுவிப்பதற்காக வருகை தந்த அருட்தந்தை குரியாகோஸ் SDB அவர்களை அறிமுகம் செய்து வைத்தார். பேரருட்தந்தை தோமஸ் பல்வத்துப்பறம்பில் அவர்கள் நன்றி கூறியபின் அன்றைய வகுப்பு ஆரம்பமானது. உளவியல் வகுப்பானது ஒரு மாதத்தில் 4 வகுப்புகளாக நடைபெறும். இதில் மாணவர்களுக்கு எவ்விதத்தில் Counselling வழங்கலாம் என்பதை குறித்தும் மாணவர்களின் உளவியல் சார்ந்த பிரச்சனைகளை எவ்வாறு கண்டுபிடிப்பது போன்ற வகுப்புகளுடன் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## 6. CARMEL JYOTHI MATRIC.HR.SEC.SCHOOL VELLIYAKULAM, COLACHEL

### Inauguration

The academic year 2018-2019 was inaugurated by Mother Vigi CMC, the Provincial of CMC Chavara Vice Province. Carmel Jyothi School was very happy to welcome our new Principal Sr. Jessy Therese and Correspondent Sr.Philo Tom.

### PTA Meeting

The first PTA meeting was conducted in our school on 11th June. Sr.Jessy our Principal and Correspondent Sr. Philo addressed the gathering and shared the vision and mission of our school. The parents were guided to handle the children in various matters.

**Celebration of Carmel Matha Feast**

Carmel Matha, feast was celebrated on 16th July 2018 in a grand manner. The Holy mass was celebrated in the school courtyard by Rev. Fr. Jose Mutathupadm, Vicar General of Thuckalay diocese and Fr. Dency, our parish priest. All the staff and students participated in the solemn mass and sweets were distributed after the holy mass.

**Inauguration of Literary association**

On July 17th the inauguration of English club, Tamil club, Science club and exhibition department was conducted. Mr. Harikesh, from Edufox was the chief guest of the function. Rev. Sr. Dr. Jessy Therese inaugurated the clubs by lighting the lamp and subsequently she delivered the inaugural address. Rev. Mother. Philo Tom distributed the badges to the executives of the English club. Mr. Harikesh, Ms. Sindhu, Ms. Janet, Ms. Sumathi, Ms. Prabha and Kumari Ashmy representing various clubs felicitated the function. Mr. Eldo Arimaly welcomed the gathering and Mr. Felix J P proposed the vote of thanks. After the function a rally was conducted by the English club.

அருட்தந்தை ஜோண்சிலால்
இயக்குநர்

---

**புலரி திருமண தகவல் மையம்**

தக்கலை மறைமாவட்டத்தின் ( Pulari Matrimony) திருமண தகவல் மையம் கல்லுவிளையில் செயல்பட்டு வருகிறது. இணையதளம் வழியாகவும், நேரடியாகவும் விண்ணப்பிக்கலாம். இதில் பதிவு செய்த கிறிஸ்துராஜபுரம் பங்கை சேர்ந்த ஆஷாவுக்கும், மஞ்சாலுமூடு பங்கை சேர்ந்த சுரேஷ் என்பவருக்கும் மே மாதம் திருமணம் நடைபெற்றது. புது மணத் தம்பதிகளுக்கு வாழ்த்துக்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
புலரி திருமண தகவல் மையம், கல்லுவிளை, முளகுமூடு அஞ்சல்
தொடர்பு எண்: 04651-275655
வலைதள முகவரி: www.pularimatrimony.com



FAMILY APOSTOLATE

## குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

### மது அடிமைகள் மறுவாழ்வு மையம்

கல்லுவிளை மது மற்றும் மன நோயாளிக்கான சிகிட்ச்சையும், ஆற்றுப்படுத்துதலும் நடைபெற்று வருகின்றன. இம்மையத்தில் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாட்களில் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை செயல்படுகிறது. இங்கு குடும்ப பிரச்சனை, கணவன் மனைவி பிரிவினை மற்றும் இளையோர்க்கும், மாணவ மாணவியர்களுக்கும் ஆற்றுப்படுத்துதல் அளிக்கப்படுகிறது. இதன் வழியாக அமைதியான குடும்ப வாழ்வும், பிரச்சனைகளிலிருந்து விடுபட்ட வாழ்வும் பங்கேற்போர்க்குக் கிடைக்கிறது. இம்மையமானது இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் தலைமையில் சிறப்புடன் செயல்பட்டுவருகிறது.

### திருமண பயிற்சி வகுப்பு

ஜூன் மாதம் நடைபெற்ற பயிற்சியில் 23 இளையோர்கள் பங்கேற்றனர். இருமாதத்திற்கு ஒருமுறை மூன்றாவது வாரம் இப்பயிற்சி நடைபெறும். இப்பயிற்சியின் போது ஒவ்வொரு வகுப்புகளும் ஒன்றரை அல்லது இரண்டு மணி நேரம் நடைபெறும். இவ்வகுப்புகள் நடத்துபவர் பேரருட்தந்தையர்கள், ஆசிரியர், மருத்துவர், அருள் சகோதரியும் ஆவர். இப்பயிற்சியில் ஜெபமாலை, காலைசெபம், தியானம், ஒப்புரவு அருட்சாதனம், திருப்பலி மற்றும் ஆற்றுப்படுத்தல் ஆகியன நடைபெறும். இப்பயிற்சி இளையோர்க்கு பயன் உள்ளதாகவும், குடும்ப வாழ்க்கைக்கு பயன் உள்ளதாகவும் அமைந்துள்ளது. இப்பயிற்சியின் இறுதிநாள் 2 மணிக்கு பெற்றோர்களுக்கான வகுப்பும் நடைபெற்றன.

### குறிப்பு

அடுத்த பயிற்சி ஆகஸ்ட் மாதம் 17-08-2018 காலை 10 மணிக்கு ஆரம்பமாகி 19-08-2018 மாலை 4 மணிக்கு நிறைவுபெறும். பயிற்சி கட்டணம் ரூபாய் 750 ஆகும்.

### குடும்ப சந்திப்பு

தற்போது களியல் பங்கில் குடும்ப சந்திப்பு நடைபெற்றுவருகிறது. ஒவ்வொரு உறவியங்கள் குடும்ப சந்திப்பு நடத்தி ஒரு உறவியத்தில் சந்திப்பு முடிந்த உடன் உறவிய ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெறும். புனித மரியன்னை ஆலயத்தின் அருட்தந்தை டினு கோட்டைக்காபறம்பில் அடிகளாரின் தலைமையில் தூய ஆவி பாடல் மற்றும் ஜெபமாலையுடன் உறவிய ஒருங்கிணைப்பு கூட்டம்

ஆரம்பமானது. இல்வாழ்வு இயக்க இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அட்டியில், ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி மேரி ஜோயிஸ், பங்குதந்தை, மற்றும் 30 க்கும் மேற்பட்ட உறவிய மக்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர். அருட்சகோதரி மேரி ஜோய்ஸ் அவர்கள் எரேமியா 29:11 ஆகிய இறைவார்த்தைகள் மையக் கருத்தாக கொண்டு பெற்றோர், வாலிபர், குழந்தைகள் ஆகியோருக்கான கருத்துக்களை பல எடுத்துக்காட்டோடு கூறினார். அருட்தந்தை அஜீஸ் அட்டியில் அவர்கள் பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்களின் செங்கடல் அனுபவம் குறித்து கருத்தை பகிர்ந்தளித்தார். 20 க்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டார்கள். நன்றி பாடலுடன் சுமார் 8.30 மணியளவில் கூட்டம் இனிதாக நிறைவுபெற்றது.

அருட்தந்தை அஜீஷ் அட்டியில்
இயக்குநர்

| BIRTHDAYS & FEASTDAYS OF REV FATHERS | |
|---|---|
| **BIRTHDAYS AUGUST** | |
| Fr. Vinod Kanakalil | 04 |
| Fr. Robins Kuzhikodil | 15 |
| **FEASTDAYS AUGUST** | |
| Fr. Tobin Alappurackal | 28 |
| Fr. Augustine Thalodil | |
| Fr. Augustine Thottananiyil CMI | |

## புனித அல்போன்சா திருத்தல திருவிழா

புனித அல்போன்சா திருத்தல திருவிழாவை முன்னிட்டு 21 ஜூலை அன்று ஆயர் இல்லத்தில் தொடங்கப்பட்ட நடைபயணத்தில் முந்தைய ஆண்டை விட அதிகமான மக்களும் அருட்தந்தையர்களும் கலந்து கொண்டனர். குறிப்பாக நடைபயண வரலாற்றில் முதல் முறையாக தக்காளிவிளை பங்கிலிருந்து சுமார் 11 பேர் காலை 4.30 மணிக்கு நடைபயணத்தை தொடங்கி அல்போன்சா திருத்தலத்திற்கு வருகை தந்தனர். அவர்களுக்கு பாராட்டுக்கள். ஜூலை 29 அன்று மறைமாவட்ட அல்போன்சா கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது.

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

Kanyakumari Social Service Society

## Value Added Things

நலமும் நல்வாழ்வு திட்டத்தின் மூலம் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் Value Added Things என்னும் ஒருநாள் பயிற்சி முகாம் கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து ஜூலை 7ம் தேதி KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை வினு D ஜோசப் தலைமையில் நடைபெற்றது. அருட்தந்தை பேசும் போது இவ் நிகழ்வு அனைவருக்கும் உபயோகமானது நாம் தேவையற்றது என நினைக்கும் பொருட்களிலிருந்து உபயோகமான பல ஊட்டச்சத்து உணவு பொருட்களை தயார் செய்ய முடியும். இங்கு படித்தவற்றை வீட்டிலும் செய்து பார்க்க வேண்டும் என்று கூறினார். சிறப்பு விருந்தினராக மத்திய தொழில் பயிற்சி பேராசிரியர் சாபிக் அவர்கள் கலந்துக் கொண்டு பலா, மா, தேங்காய், ரவா, அன்னாசி போன்றவற்றை பயன்படுத்தி ஆரோக்கியமான உணவுகளை எவ்வாறு செய்வது என பயிற்சி அளித்தார். குறிப்பாக அன்னாசி ஜூஸ், புளிச்சிக்காய் ஜூஸ், தேங்காய் பர்பி, ரவா லட்டு, சாக்லேட், பலா அல்வா, மா ஜாம், மீன் ஊறுகாய், பலா வத்தல் போன்ற செய்முறை மற்றும் பயிற்சி வகுப்பும் நடைபெற்றது. 64 நபர்கள் கலந்துக் கொண்டனர்.

## மருத்துவ முகாம்

மக்களின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு நலமும் நல்வாழ்வும் திட்டத்தின் வழியாக கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் பல்வேறு மருத்துவ முகாம் நடத்தப்படுகின்றன. நெய்யூர் C.S.I மிஷன் மருத்துவமனையோடு இணைந்து 11.07.2018 அன்று முன்சிறை தூய ஜார்ஜியார் திருத்தலத்தில் வைத்து இலவச புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் கண்டறிதல் முகாம் நடைபெற்றது. கன்னியாகுமரி சமூக சேவை சங்க துணை இயக்குநர் அருட்தந்தை வினு D ஜோசப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தூய ஜார்ஜியார் திருத்தல அதிபர் அருட்தந்தை அஜிஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். சி.ஷி. மி மிஷன் மருத்துவமனை Dr. பிறத்தன மற்றும் Dr. மனோப அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். பரிசோதனை செய்தவர்களுக்கு இலவசமாக நோய் கண்டறிவதற்கான பேப் சிமியர், மேமோகிராம், கால்போஸ் கோபி, ஸ்கேன், என்டோஸ்கோபி

போன்ற பரிசோதனை செய்யப்பட்டன. இலவச மருந்தும் ஆலோசனையும் அளிக்கப்பட்டது. 2 மருத்துவர், 2 மருந்தாளுனர் மற்றும் 10 செவிலியர்கள் மருத்துவ குழுவில் இடம் பெற்றிருந்தனர். C.S.I மிஷன் மருத்துவமனை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு. ராய் மற்றும் செவிலியர்கள் களபணியாளர் திருமதி மேரி மற்றும் விமலா குழு உறுப்பினர்கள் பொது மக்கள் என சுமார் 150 பேர் கலந்துக் கொண்டார்கள்.

அருட்தந்தை சஜி எலம்பாசேரில்
இயக்குநர்

## செங்கோட்டைச் செய்திகள்

### மாதாந்திர தியானம்

14.07.2018 அன்று ஒருநாள் தியானமானது வாஞ்சி ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது. அருட்தந்தை ராஜேஷ் எம்.சி.பி.எஸ் அவர்கள் தியான உரை ஆற்றினார். தொடர்ந்து ஆராதனை மற்றும் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. இறுதியில் திருப்பலியுடன் தியானம் நிறைவுபெற்றது.

### ஆயர் சந்திப்பு

24.072018 அன்று ஆயர் அவர்களும், குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களும் இணைந்து செங்கோட்டை மறைபரப்பு தளத்தின் பணிகளை பார்வையிட்டனர். மாலை 6.30 மணியளவில் வாஞ்சி சி.எம்.சி கன்னியர் இல்லத்தில் வைத்து அருட்பணியாளர்கள் மற்றும் அருட்சகோதரிகளின் கூடுகை நடைபெற்றது. ஆயர் அவர்கள் கலந்துக் கொண்டு செயல்பாடுகள் எங்ஙனம் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி இன்னும் விழிப்புணர்வுடனும், கண்ணும் கருத்துமாக விசுவாச பயிற்சியில் முன்னிட்டு செயல்பட வேண்டும் என்று அறிவுரை கூறினார். பக்த இயக்கங்களின் செயல்பாடுகள் கலந்துரையாடப்பட்டது. புதியதாக பணியாற்ற வந்த அருட்தந்தையர்களுக்கும், அருட்கன்னியர்களுக்கும் வாழ்த்துக்களை ஆயர் அவர்கள் கூறினார். இறுதியில் அன்பு விருந்துடன் கூடுகையானது நிறைவுபெற்றது.

அருட்தந்தை ஜாண்பால்
ஒருங்கிணைப்பாளர்

# அருட்சகோதரர்களிடமிருந்து...




பாரத மண்ணின் முதல் புனிதை தூய அல்போன்சாவின் திருநாள் நல்வாழ்த்துக்களை உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருத்தொண்டர் அருட்பொழிவு**

உரோமையில் இறையியல் நிறைவு செய்த அருட்சகோதரர் அபிலாஷ் அவர்களின் திருத்தொண்டர் அருட்பொழிவு ஜூலை 3 அன்று கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்றது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் அருட்பொழிவு வழங்கினார். ஜூலை 16 அன்று வடவாதூர் புனித தோமையார் உயர் குருமடத்தில் திருத்தொண்டர் கல்வியை தொடங்கினார்.

**குருத்துவக் கல்லூரி**

அருட்சகோதரர்கள் அனைவரும் தத்தம் குருத்துவக் கல்லூரிகளில் நலமாக பயின்று வருகிறார்கள்.

உஜ்ஜன் குருத்துவக் கல்லூரியில் பயின்று வரும் அருட்சகோதரர் லின்றோ மற்றும் அமன்றோ அவர்கள் விடுமுறை நாட்களில் தங்களுக்கு கொடுக்கப்பட்ட கிராமங்களுக்கு சென்று ஏழை மக்களை சந்திப்பது மற்றும் கணிதம், ஆங்கிலம் ஆகிய வகுப்புகளும் நடத்தி வருகின்றனர்.

கேரளாவில் பயின்று வரும் அருட்சகோதரர்கள் தூய அல்போன்சா திருநாளை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தினர்.

**களப்பணி**

கல்லுவிளை சமூக சேவை சங்கத்தில் களப்பணியாற்றும் அருட்சகோதரர் அஜின் அவர்கள் ஜூலை 9 அன்று ஏற்பட்ட வாகன விபத்தில் சிறுகாயமடைந்தார். தொடர்ந்து ஒருவாரம் கல்லுவிளையிலும் மறுவாரம் இல்லத்திலும் ஓய்வெடுத்து தற்போது மீண்டும் தனது களப்பணியை தொடங்கியுள்ளார். முழு குணமடைய செபிக்க கேட்டுக்கொள்கிறோம்.

அருட்சகோதரர்கள் லிஜூ மற்றும் ஜிஜு ஆகியோர் இவ்வாண்டு நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலத்தில் திருவிழா நாட்களில் பாடகர்குழுவினரோடு இணைந்து வழிநடத்தினர்.

**ஒருநாள் தியானம்**

களப்பணி செய்யும் அருட்சகோதரர்களுக்கான ஒருநாள் தியானம் ஜூலை 30 மற்றும் 31 ஆகிய தேதிகளில் தெற்றியோடு பங்கில் வைத்து அருட்தந்தை ஜோஷி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அருட்சகோதரர் றோபின்
தலைவர்

## மறைவட்ட செய்திகள்




### நித்திரவிளை மறைவட்டம்

**முஞ்சிறை**

நம் தந்தையாம் மார்த்தோமாவின் திருநாள் (துக்ரான) ஜூலை 3 அன்று கொண்டாடப்பட்டது. மாலை 6.00 மணிக்கு ஆடம்பர திருப்பலி மற்றும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது. அருட்தந்தை அவர்கள் மறையுரையாற்றும் போது மார்த்தோமாவின் வீரம், துணிவு, அன்பு இவற்றைச் சுட்டிக் காட்டி நம் தந்தையை போல் நாமும் வீரமும் துணிவும் உடையவர்களாக நாமும் செல்வோம் அவரோடு இறப்போம் என்ற வீர முழக்கத்தை ஏற்று விசுவாசத்திற்கு சான்று பகர்பவர்களாக வாழ முயல்வோம் என்று கூறினார்கள். 1 ஆம் தேதி மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் பங்குமக்கள் சார்பில் துக்ரான திருநாள் கொண்டாடப்பட்டது. பல்வேறு கலை நிகழ்ச்சிகளால் மாணவர்கள் சிறப்பித்தார்கள். பங்குதந்தை அஜீஷ் அட்டியில் அவர்களின் பெயர் கொண்ட புனிதரின் விழாவும் கொண்டாடப்பட்டது. அருட்சகோதரி நிர்மலின், ஊக்குவிப்பாளர் வின்சென்ட் ராஜ் ஆசிரியர் ஆகியோர் வாழ்த்துக் கூறி, வாழ்த்துப்பாடல் பாடி மகிழ்ந்தனர். தந்தை அவர்கள் கேக் வெட்டி அனைவருக்கும் இனிப்பு வழங்கி நிகழ்விற்கு நன்றியும் கூறினார். தலைமையாசிரியை நன்றி கூற பாப்பரசர் கீதத்துடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

**தூய அல்போன்சா**

பாரத மண்ணின் முதல் புனிதையாம் தூய அல்போன்சம்மாவின் திருநாள் 23-07-2018 முதல் 28-07-2018 வரை கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு நாளும் ஜெபமாலை, திருப்பலி, நவநாள் என்று ஒவ்வொரு உறவியமாக மக்கள் சிறப்பித்தனர். 28-07-2018 அன்று திருப்பலி, நவநாள் மற்றும் ஜெபமாலைப் பவனியும் தொடர்ந்து நேர்ச்சை இனிப்பும் வழங்கப்பட்டது.

**நித்திரவிளை**

ஜெயமாதா ஆலயம் துக்ரான திருநாள் ஜூலை 3 அன்று மாலை ஆறு மணிக்கு திருப்பலி மற்றும் வழிபாடுகளுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 22-07-2018 அன்று மறைக்கல்வி மாணவ மாணவியர்களால் திருநாள் சிறப்பிக்கப்பட்டது. பல்வகை கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

**சிறப்பு திருப்பலி**

புனித சவேரியார் ஆலயம்

வாறுதட்டு, புனித அந்தோணியார் ஆலயம் வயலின்கரை, கிறிஸ்துராஜபுரம் மற்றும் சீனிவிளை ஆகிய பங்குகளிலும் துக்ரான திருநாள் சிறப்புத் திருப்பலி மற்றும் 1-07-2018 அன்று மறைக்கல்வி மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிககளோடு கொண்டாடப்பட்டது.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

பங்கு தினம்

புனித குழந்தை தெரசா ஆலயத்தில் 03-07-2018 அன்று பங்கு தினம் மற்றும் உறவியங்கள் ஆண்டுவிழா நடைபெற்றது. 07-07-2018 அன்று சிறுமலர் கலையரங்கம் அர்ச்சிப்பு விழா நடைபெற்றது. ஆயர் அவர்கள் அர்ச்சித்து வாழ்த்துக்கள் கூறினார்.

முக்கூட்டுகல்

19-07-2018 அன்று தூய அல்போன்சா திருநாளை முன்னிட்டு நவநாள் மற்றும் திருப்பலி நடைபெற்றது. 28-07-2018 அன்று அருட்தந்தை ஜோசி தோமஸ் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

முழுக்கோடு ஜூபிலி விழா

15-07-2018 அன்று உயர் பேராயர் கர்த்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் புதுப்பிக்கப்பட்ட ஆலயம் மற்றும் கொடி மரம் அர்ச்சித்து திருப்பலி நிறைவேற்றினார். இவ்விழாவில் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் மற்றும் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களும் கலந்துக் கொண்டு திருப்பலி நிறைவேற்றினார்கள். பின் பொதுக்கூட்டம் அதன் பின் அன்பின் விருந்து நடைபெற்றது. 16-07-2018 அன்று ஜெபமாலை, புகழ்மாலை, திருப்பலி நடைபெற்றது. அருட்தந்தை மிஜோ புத்தன்புரைக்கல் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி, நற்கருணை ஆராதனையும் நிகழ்த்தினார். 17-07-2018 அன்று அன்பின் விருந்து நடைபெற்றது. அன்றைய திருப்பலி மறைவட்ட அருட்தந்தையர்களால் நிறைவேற்றப்பட்டது. 18-07-2018 அன்று பக்த இயக்கங்களின் ஆண்டுவிழா நடைபெற்றது. திருப்பலி மற்றும் பக்த இயக்கங்களின் தலைவராக பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் நிறைவேற்றினார். 19-07-2018 அன்று இளைஞர் இயக்க ஆண்டுவிழா நடைபெற்றது. CMI அருட்தந்தையர்கள் திருப்பலி நிறைவேற்றினர். 20-07-2018 அன்று மறைக்கல்வி ஆண்டுவிழா நடைபெற்றது. திருப்பலி மற்றும் கூட்டத்திற்கு தலைவராக அருட்தந்தை குரியன் அவர்கள் நிறைவேற்றினார். 21-07-2018 அன்று காலை 9 மணியளவில் திருப்பலி புதுநன்மை, உறுதிபூசுதல் வழங்கப்பட்டது. நமது ஆயர் அவர்கள் திருவருட்சாதனங்கள் வழங்கி திருப்பலி நிறைவேற்றினார்.

தொடர்ந்து அன்பின் விருந்து நடைபெற்றது.

முக்கூட்டுக்கல்

Holy Family School Golden Jubilee 8-07-2018 அன்று ஆயர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது.

**தெற்றிவிளை**

**ஆலய மேடை கட்டுதல்**

ஆலய மேடை கட்டுவதற்காக 22-07-2018 அன்று பங்குதந்தை ஜோமோன் மங்கலமடத்தில் அவர்கள் அடிகல் நாட்டினார்கள்.

## ஆசைபுரம் மறைவட்டம்

பாலபள்ளம்

கடந்த மாதம் 3 வாரங்கள் உறவிய சங்கமம் நடைபெற்றது. 1-07-2018 அன்று Study Centre Blessings நடைபெற்றது. புனித அல்போன்சா நவநாள் ஜெபம், சிறப்பு திருப்பலி, பவனி மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மாங்கரை

புனித வியாகப்பர் ஆலய மக்கள் பயன்படுத்துவதற்காக 2 கழிவறைகள் கட்டப்பட்டது. 20-07-2018 அன்று மாலை 6.00 மணிக்கு பங்குதந்தை அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் திருக்கொடியேற்றி திருவிழாவினை தொடங்கி வைத்தார். 21-07-2018 அன்று அல்போன்சா திருப்பயணத்தில் 14 நபர்கள் கலந்துக் கொண்டார்கள். 25-07-2018 அன்று புனித வியாகப்பர் திருநாள் திருப்பலி மற்றும் நற்கருணை பவனியும் நடைபெற்றது. 28-07-2018 அன்று 9 மாணவர்களுக்கு புதுநன்மையும், 36 நபர்களுக்கு உறுதிபூசுதலும் முன்னாள் பங்குதந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்கள் வழங்கினார். சிறப்பான மாலை ஜெபம் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 29-07-2018 அன்று ராசா திருப்பலி பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் நிறைவேற்றினார்.

பிலாங்கரை

புனித லொரேட்டா அன்னை ஆலயத்தில் 01-07-2018 அன்று மறைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. சீனாய் தியான இல்லத்தின் இயக்குநர் தந்தை மிஜோ புத்தன்புரையில் அவர்கள் வகுப்பு நடத்தினார். 08-07-2018 அன்று இளையோர் இயக்கம் தொடங்கப்பட்டது. புனித அல்போன்சா நவநாள் ஜெபம், சிறப்பு திருப்பலி மிகவும் சிறப்பாக 9 நாட்கள் கொண்டாடப்பட்டது.

ஆசைபுரம்

03-07-2018 அன்று புனித தோமையார் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. 13-07-2018 அன்று அந்தோணியார் திருவிழா கொண்டாடப்பட்டது. 9 நாட்கள் நவநாள் மற்றும் சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. 13-07-2018 அன்று பங்குதந்தை ஆன்றணி ஜோஸ் அவர்களின் Feast கொண்டாடப்பட்டது.

நடைபயணத்தில் 85 நபர்கள் கலந்துக் கொண்டார்கள்.

**கிள்ளியூர்**

புனித தேவ மாதா ஆலயத்தில் புனித அல்போன்சா நவநாள் ஜெபம், சிறப்பு திருப்பலி மிகவும் சிறப்பாக 9 நாட்கள் கொண்டாடப்பட்டது. 21-07-2018 அன்று நடைபயணத்தில் இளையோர் மற்றும் பங்கு மக்கள் கலந்துக் கொண்டார்கள்.

**தக்காளிவிளை**

புனித அல்போன்சா நவநாள் ஜெபம், சிறப்பு திருப்பலி மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. தக்காளிவிளையில் இருந்து நாகர்கோவில் வரை 21-07-2018 அன்று நடைபயணத்தில் இளையோர் மற்றும் பங்கு மக்கள் 11 நபர்கள் கலந்துக் கொண்டார்கள்.

## பந்தாலுமூடு மறைவட்டம்

**குடும்பவிழா**

அதங்கோடு தூய மரிய கொரற்றி ஆலய 38வது ஆண்டு குடும்பவிழா ஜூலை 4 முதல் 8 வரை 5 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. பங்குத்தந்தை முனைவர் கிறிஸ்துதாஸ் அவர்கள் திருக்கொடியேற்றினார். அனுதினமும் செபமாலை, திருப்பலி, மறையுரை நடைபெற்றன. மூன்றாம் நாளன்று குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் வருகை தந்து திருப்பலி நிறைவேற்றினார். தொடர்ந்து பாதுகாவலரின் திருப்பவனியும், நேர்ச்சை விருந்தும் நடைபெற்றது. நான்காம் நாளான சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பங்கு மக்கள் வரவேற்பு நல்க, ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி முதல் திருவிருந்து மற்றும் உறுதி பூசுதல் அருளடையாளங்களை வழங்கினார். தொடர்ந்து அன்று மாலை மரிய கொரற்றி கலைக்குழுவினரின் நாடகம் நடைபெற்றது. நிறைவு நாளான ஞாயிற்றுக்கிழமையன்று காலை 9.45 மணிக்கு காலைசெபமும், மறைமாவட்ட ஆவணக் காப்பாளர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் தலைமையில் இராசைத் திருப்பலியும் நடைபெற்றன. தொடர்ந்து மதிய உணவும் மாலையில் மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் கலைச்சாரல் நிகழ்ச்சியும் நடைபெற்றன.

**அல்போன்சா திருவிழா**

அதங்கோடு தூய மரிய கொரற்றி ஆலயத்தில் ஜூலை 19 முதல் 28 வரை 10 நாட்கள் அல்போன்சா திருவிழா கொண்டாடப்பட்டது. தினமும் திருப்பலி மற்றும் அல்போன்சா நவநாள் நடைபெற்றன. பத்தாம் நாளன்று மாலையில் நேர்ச்சை பாயசம் வழங்கப்பட்டது.

தகவல் சேகரிப்பு : திருமதி செலின் மேரி| திருமதி ஸ்னேகலதா| திருமதி ஹேமா




# மறைமாவட்டச் செய்திகள்

**உயர் பேராயர் வருகை**

ஜூலை 14 அன்று வருகை தந்த உயர் பேராயர் மார் ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி அவர்களுக்கு சங்கமத்தில் மாலை 4 மணிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து மறைமாவட்ட அருட்தந்தையர்களை சந்தித்தார். பின்னர் நாகர்கோவில் திருச்சிலுவை மருத்துவமனையில் அறுவை சிகிட்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிட்சை பெற்று வரும் அருட்சகோதரி மரியம்மா அவர்களை சந்தித்து நலம்பெற செபித்தார்.

**அடிக்கல் நாட்டுதல்**

ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் முன்னிலையில் ஜூலை 15 அன்று காலை 9.30 மணிக்கு பரைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். இதில் ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன், மறைவட்ட முதன்மைதந்தை பேரருட்தந்தை லூக்கா கொல்லம்பறம்பில், பங்குத்தந்தை அருட்தந்தை ஜோண்சிலால் மற்றும் பங்குமக்களும் கலந்து கொண்டனர். பின்னர் தக்கலை மாகாண CMC துறவற இல்லம், தக்கலை நண்பர்களை ஆயர் இல்லத்திலும், கழுவன்திட்டை புனித மார்டின் டி போரஸ் ஆலய கட்டுமானப்பணிகளை பார்வையிட்டார். தொடர்ந்து முக்கூட்டுக்கல் இளங்குருமட அருட்சகோதரர்களை சந்தித்தபின் முழுக்கோடு CMC மவுண்ட் கார்மல் அரங்கத்தில் மறைமாவட்டத்தில் பணியாற்றும் அருட்சகோதரிகளையும், அருட்பணிப்பேரவை உறுப்பினர்களையும் சந்தித்து உரையாடினார்.

**ஜூபிலி**

மாலை 4 மணிக்கு கர்தினால் அவர்கள் ஜூபிலி ஆண்டை முன்னிட்டு புனரமைக்கப்பட்ட முழுக்கோடு புனித தோமையார் ஆலயத்தை அர்சித்து திருப்பலி நிறைவேற்றினார். உயர்பேராயரோடு மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன், குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், திருவனந்தபுரம் மாகாண CMI துறவற சபை தலைவர் அருட்தந்தை செபாஸ்டின் சமாத்திர CMI, மற்றும் அருட்தந்தை டேவிஸ் கருகப்பள்ளி ஆகியோரும் உடனிருந்தனர். தொடர்ந்து பொன்விழா பொதுக்கூட்டத்தையும் உயர்பேராயர் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

**திருத்தொண்டுதளத்தில் ...**

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி திருத்தொண்டு தளத்தில் அருட்தந்தை ஜினோய் மற்றும் அருட்தந்தை அலக்ஸ் ஆகியோர் திருத்தொண்டுப் பணியை தொடங்கி உள்ளனர். ஜூலை 15 அன்று புலம் பெயர்ந்தோரை சந்தித்து திருப்பலி நிறைவேற்றினர்.

**வெள்ளிவிழா பயணத்தில் முழுக்கோடு கார்மல் பவன்..**

முழுக்கோடு CMC துறவற இல்லம் 1993 ஜூலை 4 அன்று தொடங்கப்பட்டது. களியல் இல்லத்திலிருந்து இறைபணியை செய்து வந்த அருட்சகோதரிகள் தங்கள் பணியை மேன்மேலும் மெருகேற்ற அன்றைய திருத்தொண்டுபணி ஒருங்கிணைப்பாளரான அருட்தந்தை மாத்யூ வாக்கேல் அவர்களின் அரும்பெரும் முயற்சியால் அருட்சகோதரிகள் தங்கி பணியாற்ற சின்ன இல்லம் உருவானது. இவ்வில்லத்தின் முதல் இல்லத் தலைவியாக அருட்சகோதரி பெற்றி அவர்கள் தலைமையில் அருட்சகோதரிகள் லியோ, ஜியோ, செலிகிரின் மற்றும் எல்சீனா ஆகியோர் முழுக்கோடு பகுதியில் இறைவிசுவாச பயிற்சி, மறைக்கல்வி, இல்லங்கள் சந்தித்தல், செபித்தல், உடல்நலம் பேணுதல் ஆகிய பணிகளை தொடங்கினர். இப்பணியின் பயனாகவும் அப்பகுதி பிள்ளைகளுக்கு சிறந்த கல்விப்பணியாற்ற 1994 அன்று ஆங்கில வழி பள்ளி உதயமானது. தொடக்கவிழாவான 1994 ஜூலை 16 அன்று முழுக்கோடு மவுண்ட் கார்மல் பள்ளி என பெயரிடப்பட்டு செயல்பட தொடங்கியது.

இவ்வில்லத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு புதிதாக கட்டப்பட்ட அரங்கம் ஜூலை 26 அன்று திறந்து வைக்கப்பட்டது. வெள்ளிவிழா காணும் CMC துறவற இல்லத்திற்கு மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துக்களும் செபங்களும்.

**விடுமுறையில்**

அருட்தந்தை ஜோஷி புத்தன்புரைக்கல் அவர்கள் ஒருமாத விடுமுறைக்காக ஆகஸ்டு 1 அன்று வருகை தர உள்ளார். தந்தை அவர்களை அன்புடன் மறைமாவட்டம் வரவேற்கின்றது. அதைப்போன்று கடந்த மாதம் விடுமுறைக்காக வருகை தந்திருந்த அருட்தந்தை றோபின் கூறுமுள்ளில் அவர்கள் ஜூலை 5 அன்று மீண்டும் அயர்லாந்து திரும்பினார்.

**தொலைத் தொடர்பு தினம்**

செப்டம்பர் 2 அன்று மறைமாவட்ட (Communication Day) தொலைத் தொடர்பு தினம் கொண்டாடப்பட உள்ளது. எனவே அன்றைய காணிக்கை மாதா தொலைக்காட்சிப் பணிகளுக்காக வழங்க வேண்டும். இறைமக்கள் மனமுவந்து பங்கேற்க அழைக்கிறோம்.

**அருட்தந்தையர்கள் தினம்**

புனித ஜான் மரிய வியானி அவர்களின் திருநாளான ஆகஸ்டு 4 அன்று மறைமாவட்ட அருட்தந்தையர்கள் தினமாக கொண்டாடப்பட உள்ளது. அருட்தந்தையர்களுக்கும் அருட்சகோதரர்களுக்கும் இடையேயான போட்டிகள் மற்றும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். இவ்விழா முக்கூட்டுக்கல் இளங்குருமடத்தில் நடைபெறும். அனைத்து அருட்தந்தையர்களும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கவும்.

**துறவற சங்கமம்**

அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகளின் துறவற சங்கமம் செப்டம்பர் 3 அன்று பிலாங்காலை தூய சிறுமலர் ஆலயத்தில் நடைபெறும். இதில் துறவற வாழ்வில் பொன்விழா மற்றும் வெள்ளிவிழா காணும் துறவறத்தார் கௌரவிக்கப்படுவர். இவ்வாண்டு பொன்விழா மற்றும் வெள்ளிவிழா காணும் துறவறத்தார் தங்கள் பெயர் மற்றும் புகைப்படத்தை மறைமாவட்ட ஆவணக்காப்பாளருக்கு அனுப்பி வைக்க கேட்டுக்கொள்கிறோம்.

முக்கூட்டுக்கல் மற்றும் ஆறுகாணி பள்ளிகள் கல்விப்பயணத்தின் பொன்விழா ஆண்டை சிறப்பிக்கின்றது.

**உருவாக்கல் பயிற்சி**

புதிய அருட்தந்தையர் களுக்கான உருவாக்கல் பயிற்சி செப்டம்பர் 13 மற்றும் 14 ஆகிய நாட்களில் நடைபெறும். இப்பயிற்சி அருட்தந்தையர்கள் கூடுகையோடு நிறைவு பெறும்.

**திருத்தொண்டுபணியில்..**

ஆயர் அவர்கள் திருத்தொண்டுப் பயணமாக அமெரிக்கா நாட்டிற்கு சென்று ஜூலை 3 அன்று மறைமாவட்டம் வருகை தந்தார். இப்பயணத்தில் ஆயர் அவர்கள் 6 சீரோ மலபார் பங்குகளையும், மறைமாவட்டத்திற்கு உதவி புரியும் நல் உள்ளங்களையும் சந்தித்து மறைமாவட்ட பணிகளையும், திருத்தொண்டுதள விரிவாக்கத்தையும் எடுத்துரைத்தார். தமிழ்நாட்டில் சீரோமலபார் சபை வளர்வதில் பெரும் மகிழ்ச்சியடைவதாக அந்நாட்டு சீரோமலபார் மக்கள் கூறியதாகவும் தெரிவித்தார். இப்பயணத்தில் சிகாகோ மறைமாவட்டத்தையும் சந்தித்தார் ஆயர் அவர்கள்.

**MCBS அருட்தந்தையர்கள்**

MCBS அருட்தந்தையர்கள் செங்கோட்டைத் திருத்தொண்டுதளத்தில் சுரண்டை பகுதியில் தங்களின் பணியை தொடங்கி உள்ளனர். அவர்கள் முதியோர் இல்ல நிர்வாகம், பள்ளி மற்றும் அதைச்சார்ந்த பகுதிகளில் திருத்தொண்டுப் பணியினை செய்கின்றனர். அருட்தந்தையர்களின் பணிசிறக்க வாழ்த்துக்கள்.

## BISHOP'S ENGAGEMENTS AUGUST 2018

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Wed | 06.00 pm | Minor Seminary: Holy Qurbana |
| 2 | Thu | 11.00 am | Champakara: First Holy Communion |
| 3 | Fri | | Bishop's House |
| 4 | Sat | 09.30 am | Mukkoottukal: St. Vianney day celebrations |
| | | 07.00 pm | Kallikulam: Our Lady of Snow Church Feast, Vespers |
| 5 | Sun | 05.30 am | Kallikulam: Matha Church Feast Holy Qurbana |
| 6 | Mon | | Bishop's House |
| 7 | Tue | 06.15 pm | Mathravilai: Feast day Homily |
| 8 | wed | 09.30 am | Curia meeting |
| 9 | Thu | | Bishop's House |
| 10 | Fri | 10.00 am | KKSSS: GB meeting |
| | | 06.30 pm | Kaliakkavilai: Feast day Kodiyettu and Homily >>> Changanacherry |
| 11 | Sat | 11.00 am | Changanacherry: Engagement and Holy Qurbana |
| 12 | Sun | 09.30 am | Nithiravilai, Holy Qurbana |
| | | 02.00 pm | Nagercoil: Alphonsa academy Prize distribution |
| | | 05.00 pm | Vellambi: Holy Qurbana |
| 13 | Mon | 10.00 am | Palai: Inter Eparchial Meeting |
| 14 | Tue | 10.00 am | Soosaipuram: St. Alphonsa college Maths National Seminar |
| | | 06.00 pm | Paramanvilai: Feast day Holy Qurbana |
| 15 | Wed | 04.00 pm | Killiyoor: Blessing of renovated church |
| 16 | Thu | 09.00 am | Tirunelveli and Shenkottai mission Visit |
| 17 | Fri | 10.00 am | St. Alphonsa college: Alfest inauguration |
| | | 05.45pm | Pilankarai: Feast day Holy Qurbana |
| 18 | Sat | 11.00 am | Soosaipuram Holy Mass at SABS regional house |
| 19 | Sun | 09.00 am<br>02.00 pm | Paraicode: Holy Qurbana and laying foundation stone<br>>>Kakkanad |
| 20- Sep. 1 | | | Kakkanad: Syro-Malabar Synod |
| 26 | Sun | | Thrissur: Baptism Holy Qurbana |

Rev. Fr. Shoji Puthenpurackal,
Office Secretary



St. Thomas Feast - First Holy Communion
Pathukani - 03.07.2017



Pulari Matrimony - First Couple



Renovated Church Blessing
Muzhucode -15.07.2018



ALPHONSA NADAIPAYANAM,
Thuckalay to Nagercoil, 21.07.2018



CATECHISM ANNIVERSARY,
08.07.2018

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570